தொடரமைப்பின் பாதையில் உள்ள தொழில் மையங்கள், போக்குவரத்து வாகனங்கள், நகர்ப்புறத்தில் உள்ள வீடுகள் ஆகியவற்றிற்குத் தேவையான எரிவாயுவை விநியோகம் செய்வதற்கான இணை குழாய் தொடரமைப்புத் திட்டத்தினை மேற்கொள்ளும். இத்திட்டம் *1,000* கோடி ரூபாய் முதலீட்டில் செயல்படுத்தப்படும். *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

2. இந்தக் குழாய் தொடரமைப்பின் சேலம் முனையத்திலிருந்து கடலூர் பகுதி வரையில் நாளொன்றுக்கு *6* மில்லியன் கன மீட்டர் எரிவாயு கொண்டு செல்லும் குழாய்களை அமைக்கும் திட்டம் *500* கோடி ரூபாய் முதலீட்டில் செயல்படுத்தப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

3. தென் மாவட்டக் கடலோரப் பகுதியில் மிதக்கும் திரவ நிலை எரிவாயு முனையம், அதாவது Floating Storage Regasification Unit ஒன்றினை உருவாக்கும் திட்டம் சுமார் *2,500* கோடி ரூபாய் முதலீட்டில் செயல்படுத்தப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இந்தத் திட்டங்கள் கெயில் நிறுவனத்தால் செயல்படுத்தப்படும். டிட்கோ நிறுவனம் இதற்குத் தேவையான ஒத்துழைப்பை நல்கும்.

முற்பகல் 10-25

மேலும், கொச்சி-பெங்களூரு எரிவாயு குழாய் தொடரமைப்பில் கிடைக்கும் எரிவாயுமூலம் முதற்கட்டமாக *500* மெகா வாட் திறனுள்ள மின் உற்பத்தித் திட்டம் *2,000* கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)* இதனை நிறைவேற்ற டிட்கோவும், கெயில் நிறுவனமும் இணைந்து ஒரு கூட்டுத் துறை நிறுவனத்தை ஏற்படுத்தும். இந்தத் திட்டம் வரும் ஐந்தாண்டுகளில் மேலும் விரிவுபடுத்தப்பட்டு *10,000* கோடி ரூபாய் அளவிற்கு இத்திட்டத்தில் முதலீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மேலும், தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் வகையில், உயர்தர உட்கட்டமைப்பு, பொது உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் போட்டியிட்டு வணிகம் செய்வதற்கு ஏற்ற சூழ்நிலைகளைக் கொண்ட புதிய தயாரிப்பு மண்டலங்கள் உருவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*